பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 24 ஞாயிற்றுக்கிழமை (09.09.2001) தொலைபேசி: 3378 ஒலி: 272

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

## வன்னிக்குச் சென்ற யாழ். ஆயர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

[வவுனியா]

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்த் துறைப் பொறுப்பாளர் சு ப. தமிழ்ச்செல்வனை யாழ் மறை மாவட்ட ஆயர் வணபிதா, தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

ஆன்மீகப் பயணத்தை மேற்கொண்டு இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட யாழ் ஆயர் அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்த்துறைப் பொறுப்பாளரை கடந்த வியாழக்கிழமை மாலை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

நீண்டகால நேரம் பேச்சில் ஈடுபட்ட இருவரும் மனம் [8 ம் பக்கம் பார்க்க]

## 4 இலங்கைத் தமிழரை ஜேர்மன் நாடுகடத்தும்
### தடுக்க ஒருவர் உண்ணாவிரதம்

(பேர்லின்)

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரிய நான்கு தமிழ் இளைஞர்களை நாடு கடத்துவதற்காக பேர்லின் நகரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு தமிழ் இளைஞர்களுள் ஒருவர் அங்கு உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரலிங்கம் தர்ஷணன் லஷ்மணன் பகீந்திரன், நித்தி (8ம் பக்கம் பார்க்க)

## நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த
# அரசும்-ஐ.தே.கட்சியும் இணைந்து
# புலிகளுடன் பேசுவது அவசியம்!

## தமிழ் எம்.பிக்கள் இதற்கு உதவவேண்டும்
### அமைச்சர் மங்களசமரவீர கோரிக்கை

(நமது நிருபர்)

இனப்பிரச்சினையை முடிவுக்குக்கொண்டுவருவதற்கு அரசாங்கமும், ஐக்கிய தேசியக்கட்சியும் இணைந்து தமிழீழவிடுதலை புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும்.

இதற்கான வற்புறுத்தலை ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமிழ்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுக்கவேண்டுமென அமைச்சர் மங்கள சமரவீரா தலைமையிலான அமைச்சர்கள் குழு தமிழ் எம்பிக்களிடம் கேட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது தொடர்பாக பேசியபோது இனப் பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு இணக்கம் காணப்பட்டதை அடுத்து அரசு விடுதலைப் புலிகளுடன் பேசும் போது அந்தப் பேச்சுவார்த்தையில் ஐக்கிய தேசியக் கட்சியும் கலந்து கொள்ள வேண்டும் என்று அரசு விரும்புகிறது.

அரசு தனது விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு தமிழ்க் கட்சி பாராளுமன்ற உறுப் (8ம் பக்கம் பார்க்க)

### அமைச்சரவை அமைப்பு
### அவகாசம் வழங்குவதற்கு

## பயண முன் அனுமதி முறை விரைவில் ரத்தாகும்
### ஜனாதிபதி-டக்ளஸ் சந்திப்பில் இணக்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாநாட்டிலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான பயண முன் அனுமதி நடைமுறை விரைவில் ரத்தாகவுள்ளது.

அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி யின் தூதுக் குழுவினர் ஜனாதிபதியை நேரில் சந்தித்து நடத்திய பேச்சு வார்த்தையை அடுத்தே இப்பயண அனுமதி முறையை ரத்துச் செய்ய ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

யாழ் குடாநாட்டு மக்கள் வெளியிடங்களுக்குச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் [8ஆம் பக்கம் பார்க்க]

## இளைஞர் சுட்டுக் கொலை

(வவுனியா)

மன்னார் முருங்கன் பகுதியில் நேற்று முன்தினம் இளை

## பொலிஸார் இருவர் கைது

(வவுனியா)

வவுனியா பொலிஸ் நிலை

## அவகாசம்வழங்குவதற்கு ஜே.வி.பி அடியோடுமறுப்பு

[கொழும்பு]

அமைச்சரவைக் குறைப்பிற்கான காலக்கெடுவான இம் மாதம் 12ம் திகதி புதன்கிழமையில் இருந்து ஒருநாளாயினும் பிற்போடுவதை ஜே.வி.பி அனுமதிக்கமாட்டாது என்று நேற்று அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது:

ஜே வி.பியின் பாராளுமன்றஉறுப்பினர் நந்தன குணதிலக்கா இதனை அரசுக்குத் தெரிவித்துள்ளார்:

அமைச்சரவை அமைப்பதற்கு அரசுஇம் மாதம் 25ம் திகதி வரை கால அவகாசம் தரும்படி அரசு ஜே.வி.பியிடம் கோரிக்கை விடுத்திருந்தது இக் கோரிக்கையை மறுத்தே ஒருநாளேனும் கால அவகாசம் நீடிக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது: (வ)

## ஜே-வி.பி க்கு பௌத்த பீடாதிபதிகள் பாராட்டு

(கொழும்பு)

கடந்த இரண்டு மாதங்களாக நாட்டில்நிலவிய ஸ்திரமற்ற அரசியல் நிலையை மனதில் கொண்டு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு உதவியமை குறித்து மல்வத்த பீடாதிபதி வண. ரம்புக்வெல்ல சிறிவிபஸ்ஸி தேரர் அஸ்கிரிய பீடாதிபதி, உடுகம ஸ்ரீபுத்தரசித்த தேரர் ஆகியோர் பாராட்டுக்கலைளத் தெரிவித்துள்ளனர்:

பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஆசீர்வாதம் பெறுவதற்கு மல்வத்த பீடத்திற்கும் அஸ்கிரிய பீடத்திற்கும் மத்திய மாகாண அமைச்சர் சரத்த எக்கநாயக்க, ஜே.வி.பியின் கம்பகா மாவட்ட எம்.பி விஜித கேரத், மத்திய மாகாண சபை ஜே.வி.பி உறுப்பினர் திமுது பண்டார அபயக்கோன் ஆகியோர் சென்றிருந்தனர்.

[8ஆம் பக்கம் பார்க்க]

(8ம் பக்கம் பார்க்க)

## எழுதுமட்டுவாளில் சிப்பாய் பலி!

(மந்திகை)

எழுதுமட்டுவாள் முன்னரங்க காவலரண்களைச் தாண்டி வேவு பார்க்கச் சென்ற படையினர் மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இராணுவச்சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார், மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

கண்டியைச் சேர்ந்த எல். தர்மவீர என்ற சிப்பாயே கொல்லப்பட்டவராவர். எஸ் புஸ்பகுமாரபடுகாயமடைந்த நிலையில் பலாலி இரா

[8ஆம் பக்கம் பார்க்க]

யில் நேற்று முன்தினம் இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்:

இராணுவக் காவலரணுக்கருகில் நடமாடியதில் இவர் சுடப்பட்டதாகவும் இவரது சடலம் முருங்கன் வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்: (ந-5)

## விண்ணப்ப திகதிநீடிப்பு

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவையின் இரண்டாம் வகுப்பு இரண்டாம் பிரிவுக்கான பதவி உயர்வுகளை வழங்கும்

[8 ஆம் பக்கம் பார்க்க]

யம் ஒன்றில் கடமையாற்றி வந்த இரண்டு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்:

அதே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவந்த ஊர் காவற்படை வீரர் ஒருவர் கஞ்சா வைத்திருந்தார் என்றும் அவரிடம் இருந்தே மேற்படி இரண்டு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் 8000 ரூபாவை இலஞ்சமாகப் பெற்றனர் என்ற காரணத்தினால் லஞ்சஊழல் ஆணைக்குழு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (5)

# அரசுமீதுநம்பிக்கையில்லாபிரேரணை ஐ.தே.கட்சி மீண்டும் பெரும் முயற்சி

[கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுமீது மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் ஐக்கியதேசியக் கட்சி தீவிரமாக ஈடுபட்டுள்ளது:

பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்படுவதற்கு முன்பாக ஐக்கியதேசியக் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை காலாவதியாகிவிட்டதுஎன்று சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா அறிவித்ததை அடுத்தேஐக்கியதேசியக்கட்சி இம்முறை தீவிரமாக இறங்கியுள்ளது.

நான்கு ஆணைக்குழுச் சட்டமூலம் 24ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்பே நம்பிக்

[8ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்


### மணமகள் தேவை

யாழ். இந்து வேளாள 37 வயதுடைய சித்திரை 1ஆம் பாதம் நட்சத்திரமுடைய கொழும்பு நகரில் நிரந்தர அரசதொழில்புரியும் (S. L. T. S. (CLASS - I) மணமகனுக்கு 33 வயதுக்குட்பட்ட படித்த மணமகளை தாயார் தேடுகிறார். சகல விபரங்களுடனும் அண்மையில் எடுத்த Photo உடனும் விண்ணப்பிக்கவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய முகவரி MR. BAVAN NO.521/3Galle Road Wella-watta Colombo- 6

(3459)

### பௌதிகவியல் இணைந்த கணிதம்

பல வருட அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் பௌதிகவியல் இணைந்த கணிதம் மிகச் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும். அலகு ரீதியாகவும் மீட்டல் செய்து தரப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். முழுப்பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் முடிக்கப்படும. தொடர்பு: R.பாலசுப்பிரமணியம் B. sc cey) Dip. in Ed. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(2472)


# அங்கொடை வைத்தியசாலையில் வேலைநிறுத்தப் போராட்டம் நோயாளர் கூச்சல்; குழப்பம்

(கொழும்பு)

அங்கொடை மனநோயாளர் வைத்தியசாலையின் ஊழியர்கள் கடந்த செவ்வாய் முதல் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் அங்கு சிகிச்சை பெறும் மனநோயாளர்கள் பல்வேறு குழப்பச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வைத்தியசாலையின் பிரதம வைத்திய அதிகாரியை இடமாற்றம் செய்யுமாறு கோரி பணியாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காரணத்தால்,

நோயாளர்களுக்கு உரிய நேரத்தில் மருந்து வகைகள் வழங்கப்படாமையால் அவர்களைக் கட்டுப்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும்,

மனநோயாளியின் தாக்கத்தில் இருந்து ஓரளவு தேறி வந்த சிலர், உரிய நேரத்தில் மருந்து உட்கொள்ளாமையால் நோய் அதிகரித்த நிலையில் கூச்சல், கூப்பாடுகள், குழப்பங்களில் ஈடுபட்டு வருவதாகவும் அறிய முடிகிறது.

(உ)

## வருடாந்த இடமாற்ற விண்ணப்பம் கோரல்

(மானிப்பாய்)

வடக்கு-கிழக்கு மாகாண அரசதிணைக்களங்களில் பணிபுரியும் இணைந்த சேவைகள் சார், திணைக்கள சேவைகள் சார் அலுவலர்களின் வருடாந்த இடமாறறத்திற்கு மாகாண அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரு திணைக்களத்தில்5வருடங்களுக்கு மேலாக பணிபுரியும் அலுவலர்கள் யாவரும் கட்டாயமாக இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்றுநிருபமொன்று மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவுகிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, கைத்தொழில் அமைச்சினால் பிரதேச செயலர் மற்றும் திணைக்கள தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(உ-120)

## இலவச பாடநூல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கான இலவசப்பாடநூல் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நல்லூர்க் கல்விக் கோட்ட அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அதிபர்களை நேரில் வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

(உ-6)

## தமிழ் யுவதி கைது

(புத்தளம்)

எலுவன் குளம் கங்கைவாடிப்பகுதியில் வைத்து தமிழ் யுவதி ஒருவரை வண்ணாத்துவில்லுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(உ)

## பொலிஸாரை தூஷித்த பெண் கைது

(கொழும்பு)

மாத்தளைப்பொலிஸ்நிலையம் முன்பாக நின்று பொலிஸாரைத் தூஷித்த முஸ்லிம் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் அதிக மது போதையில் இருந்தார் எனவும் இது இவரது வழமையான செயல் எனவும் தெரிய வந்துள்ளது.

(உ)

## புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

மணற்காடு புனித அந்தோனியார் ஆலய புனரமைப்புக்காக றான் நிதியில் இருந்து 4 இலட்சம்ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ)

## பிரதான வீதிகளில் சனநடமாட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இடம்பெற்று வரும் திருத்த வேலைகள் காரணமாக பேருந்துத்தரிப்பிடங்கள் வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டதையடுத்து தற்போது பேருந்துகள் தரித்து நிற்கும் பிரதான வீதிப்பகுதிகளில் அதிக சன நடமாட்டம் காணப்படுகிறது.

சிற்றூர்திகள் ஓரிடமும், பேருந்துகள் வெவ்வேறிடமுமாகத் தரித்து நிற்பதால் பயணிகள் அங்கும் இங்குமாக அலைந்துதிரிவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

(உ-104)

## 2வதுதொகுதி பாடநூல் விநியோகம்

[மந்திகை]

தென்மராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு இரண்டாவது தொகுதி பாடநூல்கள் நாளை திங்கட்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர். வ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

[செ-23]

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களதிகன் கால்நடை மருத்துவர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவுத்திகதி நவம்பர் மாதம் 05 ஆம் திகதியாகும்.

(உ-3)

## தொண்டர் ஆசிரியர் ஏமாற்றம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டப் பாடசாலைகளில் 1999 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கு பின் எவரையும் தொண்டர் ஆசிரியர்களாக நியமனம் செய்ய வேண்டாம் எனவும் 89 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி ஒரு வருடம் பூர்த்தி செய்தவர்களுக்கே நியமனம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கும் சுற்று நிருபம் ஒன்று கல்விச் சேவை ஆணைக்குழுவினால் சம்பந்தப்பட்ட சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக சேவை மனப்பான்மையுடன் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் பலரி ஏமாற்றமடைந்துள்ளனர்.

(உ)

## வெடிவிபத்தில் ஒருவர் பலி

(கொழும்பு)

பலாங்கொடை ஜொலமற் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்.

கடந்த வியாழன் இடம்பெற்ற இவ் வெடிவிபத்தில் கற்பாறைகளைப்பிளப்பதற்கான வெடிகளை பொருத்திக் கொண்டிருந்த சமயமே இவ் வெடி விபத்து ஏற்பட்டுள்ளது.

பலாங்கொடையைச்சேர்ந்த இரண்டு குழந்தைகளின் தந்தையான பொன்னையா கோவிந்தன் என்பவரே இவ்வாறு பலியானவராவார்.

இச் சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(செ-4)

## பொதுக்கூட்டம்

(அரியாலை)

கைதடி சைவ ஐக்கியசங்கத்தின் 80ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று மு.ப 10.00 மணிக்குகைதடி இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(உ- 106)

## இராசி பலன்

09 09 2001
(ஆவணி 24, ஞாயிறு)
சஷ்டி மு.ப 9.19 வரை
கார்த்திகை மு இ 7.45வரை
ராகுகாலம் 4.33- 6.03
நல்லநேரம் 9.03-10.33
கார்த்திகை விரதம், சித்தம்

**மேடம்**
வாக்கு கலகம், கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், பொருள் விரயம்.

**இடபம்**
மனக்கிலேசம், நல்லமுயற்சி நண்பர்கள்உதவி, அதிகாரம்.

**மிதுனம்**
பிரயாணம், காரிய அலைச்சல், தனவிரயம், நித்திரைக் குறைவு.

**கடகம்**
தனலாபம், காரியநன்மை, குடும்பசுகம், தெய்வதரிசனம்.

**சிங்கம்**
தொழில்சிறப்பு, அதிகாரம், முயற்சிகைகூடும், சுபசெய்தி.

**கன்னி**
கட்டுப்பாடு, புதியதிட்டம், உடல் வியாதி, காரியதாமதம்.

**துலாம்**
துக்கம், பிரயாணபயம், உடல் சோர்வு, காரியத்தடங்கல்.

**விருச்சிகம்**
வரவேற்பு, திடீர்ப்பயணம், நண்பர்கள்சந்திப்பு, ரோகம்.

**தனுசு**
இலட்சுமீகரம், குடும்பசுகம், சுகவாழ்வு, காரிய நன்மை.

**மகரம்**
வியாபார மேன்மை, குடும்பக்கவலை, கலகம், காரிய தாமதம்.

**கும்பம்**
ரோகபயம், மனச்சஞ்சலம், காரியதாமதம், விரோதம்.

**மீனம்**
அந்நியர் சந்திப்பு, சகோதரர் உதவி, பொருள்சேர்க்கை, பெரியோர் மதிப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

வளவன்

## விஷு புத்தாண்டில்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

**வியாபாரிகளுக்கு**
வியாபாரத்தில் மந்தநிலை நிலவி, யூனிலிருந்து நல்ல லாப விருத்தி தோன்றும்.

**மாணவர்களுக்கு**
கல்வியில் அலைச்சல் அதிக பிரயாசம் நிலவி யூனிலிருந்து கல்வி, தேர்வு நன்மை ஏற்படும்.

**இளைஞர், யுவதிகளுக்கு**
தடைகள் தோன்றி மத்திமசுகம், யூனிலிருந்து விவாகம், உத்தியோகம் அமைதல், பிரயாணசுகம் வெற்றிதரவுள்ளன.

**தொழிலாளர்களுக்கு**
முயற்சியும், அதிக பிரயாசமும் மத்திம நன்மையாக இருக்கும். யூனிலிருந்து சிறப்புடன் வருமான லாபம் உண்டாகும்.

**முதியோருக்கு**
மத்திமசுகம், ரோகச்சிரமம் நிலவி, யூனிலிருந்து ரோகம் நீங்கித் தேகசுகம் விருத்தி கிடைக்கும்.

**விதிவிலக்கு**
பிறந்தபோது சனி, குரு, ராகு, கேது மற்றும் கிரகாதிகள் ஆட்சி உச்சம் பெற்றமைந்த சாதகர்களுக்கு சொல்லப்பட்ட கஷ்டபலன்கள் நடக்காமல் நற்பலன்கள் நடக்கும்.

## அவசர கூட்டம்

[யாழ்ப்பாணம்]

வடமராட்சிப்பகுதி தொலைபேசி உரிமையாளர்களுக்கான அவசர பொதுக்கூட்டம் இன்று பி.ப 3.30 மணிக்கு மாலு சந்தியில் அமைந்துள்ள சதாபொன்ஸ் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

[உ]

## அடிக்கல் நாட்டல்

(புலோலி)

பருத்தித்துறை நகரசபையின் குடிநீர் விநியோக விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 1 இலட்சத்துப் 10 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள மூன்று நீர்த்தொட்டிகளுக்கான அடிக்கற்கள் அண்மையில் நாட்டப்பட்டன.

பருத்தித்துறை சென்தோமஸ் பகுதியில் அமையவுள்ள நீர்த்தொட்டிக்கான அடிக்கல்லை பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வின்சென்ற் கெனடியும், சுப்பர் மடப் பகுதியில் அமையவுள்ள நீர்த்தொட்டிக்கான அடிக்கல்லை நகரசபையின் உப தலைவர் எஸ். மணிவண்ணனும், வெளிச்ச வீட்டு மதவடியில் அமையவுள்ள நீர்த்தொட்டிக்கான அடிக்கல்லை நகரசபையின் செயலாளர் எஸ். அன்ரனும் சம்பிரதாயபூர்வமாக நாட்டிவைத்தனர்.

(உ-52)


### வேலணை பிரதேச சபையின் அறிவித்தல்

### சாட்டி சித்தாத்திரை மாதா வருடாந்த மகோற்சவம்-2001

சாட்டி சித்தாத்திரை மாதா கோயில் உற்சவம் எதிர் வரும 13-9-2001ஆம் திகதி ஆரம்பமாகி 22-9-2001 வரை 10 தினங்கள் நடைபெற உள்ளது.

1. விழாக் காலத்தில் ஆலயச் சூழலில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளும், நடமாடும் வியாபார நிறுவனங்களும், பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் வியாபார அனுமதிப் பத்திரத்தைப் பெற்று பொது சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் வியாபாரத்தை மேற்கொள்ள வேண்டும்.
2. சபையின் அனுமதியின்றி வியாபாரத்தை மேற்கொள்ளும் எந்தவொரு வியாபார நிலையமும் அப்பகுதியில் இருந்து அப்புறப்படுத்தப்படும்.
3. பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் ஒழுங்கமைப்புகளை பக்தர்களும், வியாபாரிகளும், வாகனதாரிகளும், பேணிநடக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.
4. ஆலயச் சூழலின் புனிதத்தையும், சுகாதாரத்தையும் முழுமையாகப்பேணுமாறு வியாபாரிகளும் பக்தர்களும வேண்டப்படுகிறீர்கள்.

ந. கருணாகரகுருமூர்த்தி
தலைவர்
வேலணை பிரதேச சபை.

08-09-2001

[C/2469]

# 1,75,000ரூபாவுடன் போலிமருத்துவர்மாயம்

15வயது நிரம்பிய இருதய நோயாளி ஒருவருக்கு இருதய அறுவைச்சிகிச்சை மேற்கொள்ளவதாகக் கூறி அவரின் பெற்றோரிடமிருந்து ஒருலட்சத்து 75ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொண்ட போலிவைத்தியர்ஒருவர் தலைமறைவாகியுள்ளார்.

சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது பிரஸ்தாப நோயாளியின் பெற்றோர் கடும் இருதய நோயால் பாதிக்கப்பட்ட தமதுபிள்ளையை மீரிஹான என்னும் இடத்தில் உள்ள தனியார், கிளினிக்கில் பணிபுரியும் வைத்தியரிடம் காட்டினர். அந்தநோயைக்குணப்படுத்த இருதய அறுவைச்சிகிச்சை செய்யவேண்டுமெனவும், தான் ஸ்ரீஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் அறுவைச்சிகிச்சை நிபுணரெனவும் கூறிய மேற்படி போலிவைத்தியர் அறுவைச் சிகிச்சைக்காக நோயாளியை ஸ்ரீஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கும்படி ஆலோசனை கூறிவிட்டு அவர்களிடம்காசைப் பெற்றுக்கொண்டு தலைமறைவாகிவிட்டார். இருதய நோயாளியின் பணத்தை ஏப்பம்விட்ட போலி வைத்தியர் இதயமற்றவைத்தியராகி விட்டார். [இ]

# வடக்கு -கிழக்கு பிரதேசங்களில் இருந்து படையினரை அகற்றி புலிகளிடம் நிர்வாகத்தை கையளிக்கவேண்டும்

## ஐக்கிய தொழிலாளர் சம்மேளனத் தலைவர் விருப்பம்

(கொழும்பு)

யுத்தத்தின் மூலம் சமாதானத்தை அடையவும் முடியாது. தமிழ்மக்களிடமிருந்து விடுதலைப்புலிகளை அந்நியப் படுத்தி தோற்கடிக்கவும் முடியாது ஆகவே விடுதலைப் புலிகளின் மீதான தடையை நீக்குவதுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதே நாட்டின் எதிர்கால சுபீட்சத்திற்கான வழியாகும்.

இவ்வாறு ஐக்கிய தொழிலாளர்சம்மேளனத்தின் தலைவர் வீனஸ் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கான வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

புதிய அரசியல் யாப்பொன்றை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் பெரும நெருக்கடியில் சிக்கி தவித்துக் கொண்டிருக்கின்றது. அது மட்டுமன்றி இரு பெரும்பான்மைக் கட்சிகளின் பொது இணக்கப்பாடும் தோல்வியில் முடிந்துள்ளது:

இதனால்இந்த பெரும்பான்மைக்கட்சிகளிடமிருந்து சிறுபான்மை இனங்கள் அந்நியப் படுத்தப்படுகின்றன. தமிழ் மக்களின் ஆதரவை பெற வேண்டுமாயின் 13வது அரசியல் சட்ட திருத்தத்தில் குறிப்பிட்டளவுஅதிகாரப் பகிர்வை மேற்கொள்ள வேண்டும்.

அதிகமாக தமிழ் மக்கள் வாழும் வடக்கு -கிழக்கில்சிங்களப்படையினரோ அல்லது பொலிஸாரோ சட்டத்தை நிலைநாட்டக்கூடாதுவடக்கு கிழக்கிலிருந்து இராணுவம் அகற்றப் படுவதுடன் வடக்கு கிழக்கு நிர்வாகத்திற்கான சட்டம் ஒழுங்குகளை தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்பான விடுதலைப் புலிகளிடம் கையளிக்க வேண்டும் என்றும் அவர் மேலும்குறிப்பிட்டார். (உ-4)

# திருமலை மூதூரில்மோதல் மூன்று பொதுமக்கள் பலி!

(மட்டக்களப்பு)

திருகோணமலை மூதூர் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள மஹிந்தபுர சோதனைச்சாவடியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மோதலில் ஒருபடைவீரரும் பொது மக்கள் மூவரும் கொல்லப் பட்டுள்ளனர், மூன்று பேர் காயமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது இரு தரப்பினருக்கும் மோதல் இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயம் வெருகல் முருகன் ஆலயத் தீர்த்தோற்சவத்தில் கலந்து கொள்வதற்காக பஸ்ஸில் வந்த பக்தர்களில் மூவரே இடையில் சிக்கிப் பலியானார்கள்:

காயமடைந்த இருவரின் நிலை மோசமானதையடுத்து இவர்கள் இருவரும் சேருவல வைத்திய சாலையிலிருந்து கொழும்பு வைத்திய சாலைக்கு மாற்றப் பட்டுள்ளனர்:

இதேவேளை மூதூர் பகுதியில் அமைந்துள்ள செஞ்சிலுவைச்சங்கக் கிளை அலுவலகம் கடந்த வியாழன் தாக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (ந-4)

# இடம் பெயர்ந்த வட கிழக்கு ஆசிரியர்களுக்கு நிரந்தர இடமாற்றம்

இடம்பெயர்ந்து தற்காலிகமாக கடமையாற்றும் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களுக்கு நிரந்தர இடமாற்றம் வழங்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண கல்வி கலாசார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் கல்விப் பணிப்பாளர் எஸ். கமலநாதன் மாகாணக்கல்விப்பணிப்பாளருக்கு கடிதம் மூலம் பணிப்புரைவழங்கியுள்ளார்.

கிளிநொச்சி முல்லைத்தீவு, துணுக்காய், மன்னார், வவுனியா ஆகிய கல்வி வலயங்களில் தற்காலிகமாக கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்களுக்கே இவ்வாறு நிரந்தர இடமாற்றம் வழங்கப்படவுள்ளது; [உ-4]

# பயணிகள் இளைப்பாற்று மண்டபதிறப்புவிழா

(மந்திகை)

பருத்தித்துறை நகரில் அமைக்கப்பட்டுள்ள பயணிகள் இளைப்பாற்று மண்டபதி திறப்பு விழா நாளை திங்கட்கிழமை மு.ப 9.00 மணிக்கு நகரசபை செயலாளர் அன்ரன் கிறைசிஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ-23)

# கண்டியில் கடும் வரட்சியினால் தீவிர வயிற்றோட்டம் குழந்தைகள் இருவர் பலி

(கொழும்பு)

கண்டிப் பிரதேசத்தில் நிலவும் கடும் வரட்சிகாரணமாக இங்குள்ள சில கிராமங்களில் வயிற்றோட்டம் தீவிரமாகப் பரவியுள்ளதாக கண்டிச் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்நோயினால் பீடிக்கப் பட்டுள்ள இரண்டு குழந்தைகள் உயிரிழந்ததுடன் சுமார் 200 பேர்வரை இந்நோய்க்காளாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்;

இதேவேளை,

உடுதும்பரப் பகுதியில் தினசரி பத்து முதல் இருபது பேர் வரை இந்நோயினால் பீடிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும்மேலும் தெரிவிக்கப்படுகிறது. (செ)

# நாளாந்தம் அதிகரிக்கும் முறையற்ற கருக்கலைப்பு

## சுகாதாரப் பணிப்பாளர்

(வவுனியா)

நாட்டில்தினமும்இரண்டாயிரம் சட்டவிரோதகருக்கலைப்புகள் இடம்பெறுவதாக சுகாதாரஅமைச்சின்பணிப்பாளர் மகாநாம இராஜதந்திரி தெரிவித்துள்ளார்.

குருநாகலில் உள்ள சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சட்டவிரோதமான கருக்கலைப்பை அரசாங்கம் தடைசெய்தபோதிலும் தினமும் 1500 - 2000 வரையான கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன.

அதுமட்டுமன்றிஅநேகமான கருக்கலைப்பு நிலையங்களில் மருத்துவ முறைப்படி கருக்கலைப்பு இடம் பெறாமையால் நோய்கள் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றது.

இவ்வாறான சட்டவிரோதமான கருக்கலைப்பு நிலையங்களை ஊடகவியலாளர்கள் அறிந்து உரியவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)

# இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

குருநகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்றைய தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநகரைச் சேர்ந்த ஜேசுதாஸ் அன்ரனி என்றமேற்படி இளைஞனை கைது செய்து இம்மாதம் 12 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றில் ஆஜர்செய்யுமாறு காங்கேசன் துறை தடுப்பு முகாம்பொறுப்பதிகாரியாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைப் பணித்ததன் பேரிலேயே மேற்படி இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்: (உ-6)

# வணங்கியதும் இரங்கிய காட்டு யானை

## குருநாகலில் அதிசயம்

(கொழும்பு)

காட்டுயானையைக் கண்டு மனிதர்கள் பயந்து ஒதுங்குவது தான் வழமை; ஆனால் ''எங்களுக்கு எவ்வித கெடுதலும் செய்ய வேண்டாம்'' என வணங்கியதும் எதுவித தீங்கும் புரியாமல் யானை விலகிய சம்பவம் குருநாகல் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது; சூடடிக்கப் பட்டு தயாராக இருந்த நெல்லை இரவு வேளையில் உண்பதற்காக வந்த யானையிடமே காவலாளிகள் மேற்படி விநயமாக வணங்கியதும் அது விலகிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனிதர்களுக்கு மனிதர்களே இரங்காத நிலையில் மிருகங்கள் இரங்குவது குறித்து இப் பகுதி மக்கள் வியப்புத் தெரிவித்துள்ளனர். (செ)

# ஆயுள்வேத கருத்தரங்கு இன்று

(யாழ்ப்பாணம்)

ஆயுள்வேத வைத்தியர்கள் பங்குபற்றும், மூலிகைகள், ஆயுள்வேத மருந்துகள் பற்றிய கருத்தரங்கு இன்று மு.ப. 10. 00 மணிக்கு சுண்டுக்குளி ஜெசித்தாரா விருந்தகத்தில் அகில இலங்கை அரசசேவைகள் சித்த ஆயுள்வேத வைத்திய சங்கத் தலைவர் டாக்டர் இரா: கனகலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமியும், சிறப்பு விருந்தினர்களாக குழந்தை நல மருத்துவர் டாக்டர் சேர் சிவசண்முகராஜா, சித்த மருத்துவத்துறை விரிவுரையாளர் டாக்டர் பொ.இராமநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

# 30 கிராமிய பாடசாலைகள் இவ் வருடம் மூடப்படும்

(பேருவளை)

கிராமியப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் நகரப் பாடசாலைகளைநோக்கிப்படையெடுத்து வருவதைத் தொடர்ந்து மேல் மாகாணத்தில் 30 கிராமியப் பாடசாலைகள் இவ் வருடம் மூடப்படவுள்ளன;

மேல் மாகாணத்தில் 500 பாடசாலைகள் இயங்குகின்ற போதிலும் சகல பாடசாலைகளுக்கும் வேண்டிய வளங்கள் காலத்திற்கு காலம் வழங்கப்பட்டு வருவதாக மேல் மாகாணசபை தெரிவித்துள்ளது; (உ)


## ஸ்ரீ வாணியின் ஏழு கேள்விகள்

### போட்டி இல: 01

01. முதன் முதலில் விண்வெளிக்குப் பயணம் செய்த பெண்மணி யார்?
02. இலங்கையின் தேசிய விளையாட்டு யாது?
03. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி யார்?
04. உலகில் உள்ள கண்டங்களில் மிகச் சிறியது எது?
05. உரோம மக்களின் மொழி எது?
06. இலங்கையின் தேசிய விலங்கு எது?
07. உலகில் உள்ள கண்டங்களில் மிகப் பெரியது எது?

மேலே உள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை எழுதி கீழே உள்ள கூப்பனை நிரப்பி அனுப்பி வைக்கவும்.

பெயர்: ____________________

முகவரி: ____________________

தொழில்: ____________________

கையொப்பம்: ____________________

விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதி திகதி: 16-09-2001

அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ வாணியின் ஏழு கேள்விகள், ஸ்ரீவாணி நகை மாடம், 173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[கி/2471]

# கீதையை போதித்த கிருஷ்ண பரமாத்மா

# நாதியற்றவர்களுக்கு நல்வழி காட்டுவார்

(இன்று கிருஷ்ணஜயந்தி தினம்)

கிருஷ்ண ஜயந்தி, கோகுலாஷ்டமிஎனக் கொண்டாடப்படும் கண்ணபரமாத்மா பிறந்த நாள், விநாயகருக்கு விநாயகஷஷ்டியும், முருகனுக்குக் கந்தஷஷ்டியும், சிவபிரானுக்கு சிவராத்திரியும், அம்பிகைக்கு நவராத்திரியும் போல வைஷ்ணவர்களாலும், சைவ பெருமக்களாலும் வெகுசிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது.

### அவதரித்தார்

கோகுலத்திலே பிறந்து மாடு மேய்ப்பவனாகக் கோகுலன் எனும் நாமத்துடனும், தெருவிலே தீராத விளையாட்டுப் பிள்ளையாகக் குழல் ஊதும் கண்ணனாகவும், போர்க்களத்திலே அர்ச்சுனனுக்குப் பார்த்தசாரதியாகவும், திரௌபதையின் மானங்காத்த ஆபத்பாந்தவனாகவும், குசேலர்போன்ற பக்தர்களின் ரட்சகனாகவும், பீஷ்மருக்குமுத்தி கொடுத்த பெருஞானியாகவும், கீதோபதேசத்தினால் உலகின் அஞ்ஞான இருளகற்றி பேரொளி விளங்கவைத்த பரமாத்மாவாகவும் கிருஷ்ணபரமாத்மா



எங்கும் இருள் சூழ்ந்திருந்த அந்தகார வேளையில் உலகில் அவதரித்தார்.

### கீதை உபதேசம்

பிரமதேவருக்கு தானேபசுவாகவும், கன்றாகவும், சிறு குழந்தையாயுமிருந்து தாய்க்கேதம் வாயினுள் அண்டசராசரங்களையும் காட்டியும், அர்சுனனுக்கும், பாண்டவர்களுக்கும் தமதுவிசுவரூபத்தைக் காட்டியும் அஞ்ஞானஇருளகற்றி மெய்ஞான ஒளிக்குவழிகாட்டிக் கீதைஉபதேசம்செய்தவர் கண்ணபரமாத்மாஆவார்.

உலகில் அதர்மங்கள் அழியவும் தர்மங்கள் தழைக்கவும் யுகங்கள் தோறும் அவதாரம் எடுப்பதாக கண்ணபிரான் கீதோபதேசத்தில் அருளியுள்ளார். கண்ணபிரானின் தசாவதாரங்கள் தீயோரிடமிருந்து நல்லோரைக்காக்கவும், நவக்கிரகங்களால் ஏற்படும்கோளாறுகள் நலியவும், கிரக ஆதிபத்திய நாயகர்களாகவும் கண்ணன் அவதாரங்களை எடுத்து நம்பினோருக்கு நல்லருள் புரிகிறார்.

### நவக்கிரக அவதாரம்

நவக்கிரகங்களுள் இராமாவதாரம் சூரியனாகவும் கிருஷ்ணாவதாரம் சந்திரனாகவும் நரசிம்ம அவதாரம் செவ்வாயாகவும் கல்கி அவதாரம் புதனாகவும் வாமனாவதாரம் வியாழனாகவும்' பரசுராம அவதாரம் சுக்கிரனாகவும் கூர்மாவதாரம் சனீஸ்வரனாகவும் வராக அவதாரம் ராகுவாகவும் மச்சாவதாரம் கேதுவாகவும் பலராம அவதாரம் குளிகனாகவும் மக்களுக்கு இரகவழிபாட்டில் நல்லருள் புரியக்கண்ணபரமாத்மா வழிகாட்டியாய் விளங்குகின்றார்.

கண்ண பரமாத்மாவாவின் மேற் பெரும் பக்தியுடையவரானதொண்டரடிப்பொடியாழ்வார்.

பச்சைமா மலைபோல்<br>
மேனிப்<br>
பவள வாய்க் கமலச்<br>
செங்கண்<br>
அச்சுதா அமரரேறே<br>
ஆயர்தங் கொழுந்தே<br>
என்றும்<br>
இச்சுவைதவிரயான் போய்<br>
இந்திரலோகம் ஆளும்<br>
அச்சுவை பெறினும்<br>
வேண்டேன்<br>
அரங்கமா நகருளானே

என கண்ணபெருமானைப் போற்றிப்பாடி வழிபடுகின்றார்.

**நீர்வைமணி**

குலசேகராழ்வார், கண்ணா நீஎனக்குஎன்னதுன்பம் கொடுத்தபோதும், என்னைப் பக்குவப்படுத்தி ஆட்கொள்ள நீகையாளும்உபாயமாகவே அதைக் கருதுவேன் என்கின்றார். நாமும் இதை உணர்ந்துகண்ணனை நாடி நல்லருள் பெறுவோமாக.

## மன்னார் மாவட்டத்தில் கல்வித்தரம் மிக வீழ்ச்சி

### ஆசிரியர் பற்றாக்குறை காரணம்

[வவுனியா]

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் உள்ள பெரும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் அங்கு கல்வித்தரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக மன்னார் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தில் உள்ள மடு கல்வி வலயத்திற்குட்பட்ட 41 பாடசாலைகளில் 24 ஆசிரியர் வெற்றிடங்களும் மன்னார் கல்வி வலயத்திற்கு உட்பட்ட 64 பாடசாலைகளில் 224 ஆசிரியர் வெற்றிடங்களும் நிலவுவதாக அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்திலுள்ள 105 பாடசாலைகளில் 23 ஆயிரத்து 675 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இங்கு 471 ஆசிரியர் வெற்றிடங்கள் நீண்ட காலமாகவே நிரப்பப்படாதுள்ளது. (செ)

## முன்பள்ளிகள் புனரமைப்பு

[புலோலி]

பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் உள்ள இரண்டு முன் பள்ளிகள்சுமார் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப் படவுள்ளன.

தும்பளை உதயசூரியன் முன்பள்ளி 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும், சுப்பர்மடம் சித்திவிநாயகர் முன்பள்ளி 90 ஆயிரம் ரூபா செலவிலும் புனரமைக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. [செ-52]

## சங்கேமுழங்கு

### மனிதாபிமான தீர்வு தேவை

கடந்த மாதம் 93 ஏ.பி உலர் உணவு நிவாரணம் 94 ஏ.பி. உலர் உணவு நிவாரணம் ஆகிய யூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குரிய உலர் உணவுப் பொருட்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாக விநியோகிக்கப்பட்டன.

ஆகஸ்ட் மாதத்திற்குரிய 94 ஏ பி. நிவாரணம் குறுகிய கால இடைவெளி அவகாசத்தில் கடந்தவாரம் விநியோகிக்கப்பட்ட தால் உதவிகள் அற்ற முதியவர்கள், ஊனமுற்றோர், நோயாளிகள், ஆகியோரால் அதைப் பெற்றுக்கொள்ளஇயலவில்லை. இதனால் உலர் உணவுநிவாரணத்தையே நம்பி வாழ்கின்ற பல ஏழைக் குடும்பங்கள் பட்டினியில் வாடுகின்றன. பல பிரதேச செயலர் பிரிவுகளில் கணிச தொகையான குடும்பங்கள் இதைத் தவறவிட்டுள்ளன.

அடுத்த கட்டம் உலர் உணவு முத்திரைகளுக்கே வழங்கப்படும் என்பதனால் கணக்குகளை முடிப்பதற்காக அவசரப்படும் அதிகாரிகளின் இந்நடவடிக்கை ஏழைமக்களின் வயிற்றில் அடிப்பதாகவே உள்ளது. தொழில்களை கைவிட்டு இருப்பிடங்களை இழந்து உறவுகளைத் தொலைத்து நடைப் பிணங்களாக ஒரு வயிற்றுச் கஞ்சிக்காக ஏங்குகின்ற இம் மக்களின் துயர் துடைக்க வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து சமய கலாசார அமைச்சர் மாண்புமிகு கே. என். டக்ளஸ் தேவானந்தா, மனிதாபிமான ரீதியில் விரைந்து நடவடிக்கை எடுப்பார் என எதிர் பார்க்கிறேன்.

பிரதேச செயலர்களினால் கடிந்து துரத்தப்பட்ட இம்மக்களுக்கு தவறவிடப்பட்ட நிவாரணம் கிடைக்க அமைச்சர் ஆவன செய்யவேண்டும்.

- எம். எஸ். எஸ். கீர்த்தி<br>
அரியாலை

## காரைநகருக்கான பேருந்துச் சேவையை 5 மணிக்கு ஆரம்பிக்கவும்

### வர்த்தகர் சங்கம் கோரிக்கை

[ஊர்காவற்றுறை]

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான பேருந்துச் சேவையினை அதிகாலை 5.00 மணிக்கு ஆரம்பிக்க வேண்டும் என காரைநகர் வர்த்தகர் சங்கம் சம்பந்தரப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு அதிகாலையே பேருந்துச்சேவையினை ஆரம்பித்தால் நோயாளர்கள், வேலைத் தலங்களிற்கு செல்வோர் எனப்பலருக்கு சௌகரியமாகஇருக்கும்மெனவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (செ-75)

## வெடிக்க வைக்கும் கருவி மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 6 ஆம் திகதி நண்பகல் வேளை மூதூர் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் குண்டுகள் வெடிக்கவைக்கும் கருவி ஒன்றைக் கண்டெடுத்துள்ளதாக ஊடகத் தகவல் மையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## நீர்வையில் இன்று பொன்விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீகணேசா சனசமூக நிலைய பொன்விழா இன்று பிற்பகல் 2.00 மணியளவில் அரசகேசரிப் பிள்ளையார் ஆலய முன்றலில் இடம் பெறவுள்ளது.

சிவஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்கள் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் சிவதொண்டன் நிலையக் தலைவர் சிவத்திரு சுவாமிகள் அருணாசலம் செல்லத்துரை பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார்.

இளைப்பாறிய மாவட்ட நீதிபதியும் தற்போதைய பதில் நீதிபதியுமான மு. திருநாவுக்கரசு, கவிஞர் இ. முருகையன், வலி கிழ. பிரதேச செயலர் க. கேதீஸ்வரன், யாழ்ப்பாண உதவி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்வர்.

வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் செ. குகதாசன், யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் ப. கணேசலிங்கம் உட்பட பிரமுகர்கள் பலர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வர்.

கலை நிகழ்ச்சிகள் பலவும் இடம்பெறவுள்ளன. (க)

## சேவை விஸ்தரிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைக்கான பேருந்துச் சேவை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து பி.ப 3:15 மணிக்கு 780 ஆம் இலக்கப் பாதையூடாக ஊர்காவற்றுறைக்குச் சென்று, மீண்டும் அங்கிருந்து மாலை 5.00 மணிக்கு யாழ். நகரை வந்தடையும்.

இச் சேவை இம் மாதத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-75)

## சமுர்த்தி உத்தியோகத்தருக்கு தகுதிகாண் பரீட்சைக்கான பயிற்சி வகுப்பு

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதிகளான நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தகுதிகாண் பரீட்சைக்கானபயிற்சி வகுப்பொன்று நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பில் 80ற்கும் மேற்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். [செ-75]

## படையினர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவுக்குவடமேற்கே நாவற்குளம் பிரதேசத்தில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் படைவீரர்கள் நால்வர்படுகாயமடைந்தனர்.

இதன் பின்னர் அவ்விடத்தில் தேடுதல் நடத்திய படையினர் கிளைமோர் குண்டொன்றை மீட்டெடுத்துள்ளனர். (உ)

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய நடைமுறையின் கீழ்மா விநியோகம் செய்வது தொடர்பான கலந்துரையாடல் இன்று மு. ப. 10.00மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் நடைபெறும். இக் கலந்துரையாடலில் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறுசமாசத் தலைவர் சீ. வி. கே. சிவஞானம் அறிவித்துள்ளார். [உ]

அளவெட்டி நாகவரத நாராயணன் தேர் உற்சவக் கவிதை

## தேரிழுக்கக்கோடி தருவான்

எண்ணியதைத் தந்திடுவான் கண்ணபெருமான்<br>
ஏறிவரும் தேர் இழுக்கக் கோடி தருவான்<br>
நண்ணி வரும் அடியவர்க்குக் கண்ணைத் திறப்பான்<br>
நல்லளவை யூரதனில் நம்பிக்கை தருவான்

அளவையூர். கே. எஸ். சிவஞானராஜா

## இன்று ஒரு தகவல்

# உலக வடிவில் ஒரு படிகம்

உலக உருண்டை வடிவத்தை ஒவ்வொரு பெரிய மனிதருக்கும், ஒவ்வொரு பெரிய நாட்டுக்கும் அனுப்பி வைக்க நான் விரும்புகிறேன். இது உலகத்தின் வடிவமாக இருக்குமே தவிர தேசங்களின் வரைபடமோ, கண்டங்களின் வரைபடமோ அதில் இருக்காது. கடற் பரப்பு, நிலப் பரப்பு எதுவும் அதில் குறிக்கப்பட்டிருக்காது; அது ஒரு தெளிவான படிகம் போன்றது. அதை மேசையின் மேல் வைத்துக் கொள்ளலாம். அருகில் அழுத்துகின்ற சிவப்பு பொத்தான் ஒன்று இருக்கும் பார்ப்பதற்கு. உள்ள ஒரு பொருள் போன்றது அந்தப் படிக வடிவததில்அவர் பார்க்கும்போது:

மலரும் குழந்தைகள் தன்னைவிடச் சிறிய பெண் குழந்தை ஒன்றை ஒருஅழகிய சிவப்பு வண்டியில் வைத்து ஒரு சிறிய பையன் இழுத்துக் கொண்டு போகிறான். குழந்தைகள் மகிழ்ச்சி பொங்க கலகலவென்று சிரிக்கிறார்கள். சற்றே வயதான வாலிபர்கள் சிரிப்பதை நிறுத்தி விட்டார்கள். ஏனெனில் அவர்கள் பிரச்சினைகளைச் சந்திக்கிறவர்கள். ஒரு மணமகனும், ஒரு மணமகளும் வாழ்க்கையின் மிக உன்னதமான நேரத்தில் மணக்கோலத்தில் வீற்றிருக்கிறார்கள். மனிதர்கள் மேலும், மேலும் கட்டடங்களை எழுப்பிக் கொண்டே போகிறார்கள். எதற்காக? பெண்கள் தமது வேலைகளை முடித்து விட்டு கணவன்மார்களின் வருகைக்காகவும், அவர்களுடைய தழுவல்களுக்காகவும் காத்திருக்கிறார்கள். வயதான தம்பதிகள் இளமைக் கால நினைவுகளை அசைபோட்டபடியே ஒருவரோடு ஒருவர் கைகோர்த்துக் கொண்டே எதிர்கால நாட்களும் மகிழ்ச்சியானதாக இருக்கவேண்டும் எனக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் காட்சிகளை எல்லாம் ஒவ்வொரு தேசத்திலுள்ள ஒவ்வொரு பெரிய மனிதரும் தன் முன்னால் உள்ள படிக உருண்டையில் ஒரு வேளை பார்க்கக்கூடும். அந்தக் காட்சிகள் மறைந்து மீண்டும் அது தெளிவான படிகமாகி விடக்கூடும். அதைப் பார்த்துக் கொண்டிருப்பவர் சிவப்புப் பொத்தானைஅழுத்துகின்றபோது... அதே உலக உருண்டை... தேசங்களும் இல்லை, கண்டங்களும் இல்லை... கடல் பரப்பு இல்லை, நிலப்பரப்பு இல்லை...

டாக்டர் எம்.ஆர். காம்ப்மேயர்

## படையினர் விதித்த தடையால் பாதிப்புற்ற

# வடமராட்சி மீனவருக்கு நிவாரணம்

## அதிகரித்து வழங்க கோரிக்கை

(மந்திகை)

வடமராட்சிப் பகுதி மீனவர் குடும்பங்களுக்கு அதிகரித்த நிவாரணம் வழங்க கோருவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கச் சமாசத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டதன் பிரகாரம் வடக்கு புனர்வாழ்வு அமைச்சு மற்றும் யாழ். அரச அதிபர் ஆகியோரின் கவனத்தின் கீழ் இவ் விடயம் கொண்டு வரப்படவுள்ளது.

இதேவேளை, கடந்த முதலாம் திகதி முதல் வடமராட்சிக் கடற் பரப்பில் மீன் பிடிப்பதற்குப் படையினர் தடை விதித்ததைத் தொடர்ந்து மீன் பிடித் தொழிலை நம்பி வாழ்ந்த குடும்பங்கள் பலவும் மிகுந்த பொருளாதாரக் கஷ்டத்தில் துன்புறுவது குறிப்பிடத்தக்கது.

(உ-23)

## கொழும்பில் தமிழ்விழா

(அரியாலை)

கொழும்பு திருமறைக் கலா மன்றம் நடத்தும் தமிழ் விழா எதிர்வரும் 14,15,16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வுகள் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்திலும், இரண்டாம் நாள் நிகழ்வுகள் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்திலும், மூன்றாம் நாள் நிகழ்வுகள் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் இடம் பெறவுள்ளன.

(உ-106)

## தற்கொலை செய்வதற்கு பெண் மூட்டிய தீ பரவியது

## பற்றைக்காடு எரிந்து நாசம்

(கொழும்பு)

இளம் பெண் ஒருவர் தற்கொலை செய்வதற்காக மூட்டிய தீ பரவியதில் அருகிலிருந்த இரண்டரை ஏக்கர் பற்றைக்காடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

அட்டன் காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கருகில் வசிக்கும் இளம் பெண் குடும்பத்தகராறு காரணமாக மனமுடைந்த நிலையில் தன்னைத்தான் மாய்த்துக்கொள்வதற்காக மூட்டிய தீயே, இவ்வாறு வரட்சி காரணமாக கருகியிருந்த பற்றைக்காடுகளில் பரவியதாக தெரியவந்துள்ளது.

(உ)

## புதிய கட்டட திறப்பு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் வீதியில் அமைக்கப்பட்டுள்ள ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா 11ம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணிக்கு சங்கத்தின் கிளைத் தலைவர் மேரி எட்மன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர சபை ஆணையாளர் இ. இராமலிங்கம், யாழ். மாநகர சபை உறுப்பினர்களான த. சுபத்திரன், மங்களநேசன் மற்றும் நல்லூர் பிரதேச சபைத்தலைவர் க.மணி பல்லவராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-15)

## விசாபெற்றுவருவதாகக்கூறி பணமோசடி செய்தவர் மீது வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

பிரிட்டிஷிற்கு செல்வதற்கு விசாபெற்றுத் தருவதாகக் கூறி ஐந்தரைலட்சம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்த ஹோட்டல் முகாமையாளர் ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த ஹோட்டல் முகாமையாளர் ஒருவர், கொழும்பு சர்வதேச பாடசாலையொன்றில் கல்விபயிலும் மாணவன் ஒருவரிடமிருந்தே மேற்படி பணத்தைப் பெற்று மோசடி செய்துள்ளார்.

பணத்தைப் பெற்றவர் விசா பெற்று தன்னை பிரிட்டனுக்கு அனுப்பாததினால் சந்தேகம் ஏற்பட்டதனால் மேற்படி மாணவன் நீர்கொழும்பு பொலிஸின் விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் இது பற்றி முறையிட்டுள்ளார்.

(செ)

## மொழித்திறன் விருத்தி பற்றிய அறிவுறுத்தல் கூட்டம்

(மந்திகை)

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கு, மொழித்திறன்விருத்திபற்றிய அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வறிவுறுத்தல் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 20 பாடசாலைகளின் அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

(செ-23)

## வறிய மக்களுக்கு மலசல கூட வசதி

(மந்திகை)

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 13 குடும்பங்களுக்குமலசலகூடம் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளதாக பருத்தித்துறை நகரசபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நீர்அடைப்பு மலசலகூடம்ஒன்று அமைப்பதற்கு 7ஆயிரத்து 500 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(உ-23)

## பளைப் பி. செயலர் பிரிவில் இடம் பெயர்ந்தோருக்கு நிவாரண முத்திரை விநியோகம்

(மந்திகை)

பளைப் பிரதேச செயலர் பிரிவில், இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணமுத்திரை நாளை 10 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை விநியோகிக்கப்படவுள்ளதாக பிரதேச செயலக வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியில் வசிப்பவர்களுக்கு 10 ஆம் 12 ஆம் திகதிகளிலும், வலிகாமம் பகுதியில் வசிப்பவர்களுக்கு 11 ஆம், 14 ஆம் திகதிகளிலும் நிவாரண முத்திரை விநியோகிக்கப்படவுள்ளது.

அத்துடன் புதிய பங்கீட்டு அட்டை விநியோகிக்கப்படவுள்ளதால் குடும்பத் தலைவர்களை பழைய பங்கீட்டு அட்டையினைக் கொண்டு வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(செ-23)

## உணவில்இருந்த சவரஅலகு நாக்கை வெட்டியது

(மட்டக்களப்பு)

சிற்றுண்டிச் சாலையில் உணவருந்திக் கொண்டிருந்த பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவரின் நாக்கு வெட்டப்பட்டது.

இச்சம்பவம் அண்மையில் அம்பாறை நீதிமன்ற சிற்றுண்டிச் சாலையில் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப கான்ஸ்டபிளான உபதிஸ்ஸ என்பவர்சிற்றுண்டி சாலையில் காலை உணவருந்திக்கொண்டிருந்த சமயம் அதற்குள்ளிருந்த பிளேட் அவரின் நாக்கை பதம்பார்த்துள்ளது. இதனால் இவர் தற்போது சிகிச்சைக்காக அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சிற்றுண்டி சாலையின் முகாமையாளர் சிற்றுண்டி வழங்குவோர் ஆகியோரைக்கைது செய்து விசாரணை செய்து வருவதாக அம்பாறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஹரிஸ் சந்திரபண்டார தெரிவித்துள்ளார். (ந-4)

## சிறுமிமீது பாலியல்வல்லுறவு தொல்புரம் வாசிக்கு இருவார விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

15 வயது சிறுமி மீது பாலியல் வல்லுறவுகொண்டதாக கூறப்படும் சந்தேக நபருக்கு இருவார கால விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கோண்டாவில் கிழக்குப் பகுதிச் சிறுமி மீது கடந்த மாதம் 28 ஆம் திகதி தகாத முறையில் நடந்து கொண்ட தொல்புரத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவருக்கே யாழ். நீதிமன்ற நீதிபதி மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

மேற்படி சந்தேக நபர் ஏற்கனவே இரு தடவைகள் மணம் புரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-6)

## மண்டபத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வடக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க கலாசார மண்டபத் திறப்பு விழா இன்று மு.ப. 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருமதி தி. குனேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவில் மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

(செ)

## சலன சித்திர நிறுவன 5ஆம் ஆண்டுநிறைவுவிழா

(அரியாலை)

'சலன சித்திரம்' நிறுவனத்தின் 5 வது ஆண்டு நிறைவு விழா நாளை கொழும்பில் கொண்டாடப்படவுள்ளது.

'உழைக்கும் கலைஞர்களே ஒன்று சேருங்கள்' எனும் மகுடத்தின் கீழ் முழுநாள் நிகழ்வாக நடைபெறவுள்ள இவ் விழாவில் திரைப்படத் தொழில்நுட்பப் பயிற்சி, பொதுக்கலந்துரையாடல் குழுக் கலந்துரையாடல், கருத்தரங்கு, திரைப்படக் காட்சி என்பன இடம் பெறவுள்ளன.

சொந்தக் கலைகள் மற்றும் கலைஞர்களின் வாழ்வுகளும் வளர்ச்சிக்குமான 'சுதந்திரக் கலைக் கொள்கை' ஒன்று இவ் விழாவில் பிரகடனம் செய்யப்பட இருப்பதாகவும் விழா மலர் வெளியிடப்பட இருப்பதாகவும் பொதுச் செயலாளர் க. தேவதாசன் தெரிவித்தார்.

'சலனசித்திரம்' இனங்களுக்கிடையே நல்லுறவு மற்றும் புரிந்துணர்வை ஏற்படுத்த உழைக்கும் அமைப்பு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-106)

## கைப்பணியாளர்அபிவிருத்தி சங்கம் அங்குரார்ப்பணம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய கைப்பணியாளர் அபிவிருத்திச் சங்கமொன்று அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இச் சங்கத்தில் புதிய அங்கத்தவர்களைப் பதிவு செய்தலும் கலந்துரையாடலும் எதிர் வரும் 24 ஆம் திகதி தலைவர் சி. மகாலிங்கம் தலைமையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

(உ-120)

## தாக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில்

(மந்திகை)

தேங்காய் பிடுங்கமுற்பட்ட திருடர் கோஷ்டியைஎச்சரித்த தோட்ட முதலாளியை திருடர்கற்களால் தாக்கியதில் தலையில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துன்னாலையைச் சேர்ந்த கனகசபை பாக்கியநாதன் (வயது25) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

(செ-23)

### தமிழக பொறியியல் கல்லூரிகளில்
## இல.தமிழ்மாணவர்களுக்கு 25 வீத ஒதுக்கீடு

தமிழக பொறியியல் கல்லூரிகளில் இவ்வாண்டு 25 சதவீத ஒதுக்கீடு இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

நேற்று வெளியானசெய்திக் குறிப்பில் தமிழகத்தில் இலங்கைத் தமிழ் அகதி மாணவர்கள் உட்பட 25 வீதத்தினர் பொறியியல் கல்லூரிகளிலும் மற்றும் தமிழகத்திலுள்ள பொலிரெக்னிக்கல்லூரிகளில் 30 வீத இலங்கைத் தமிழ் மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

### சர்வதேசமெங்கும்
## இம்மாதம் 21ஆம் திகதி யுத்த நிறுத்த தினம்

(லண்டன்)

உலக நாடுகளில் இடம் பெறும் வன்முறைகள், மரணங்கள் இனயுத்தங்கள் போன்றவற்றால் பாதிப்படைந்த மக்களுக்கு நிவாரண உதவி வழங்க இம்மாதம் 21 ஆம் திகதி சர்வதேச யுத்த நிறுத்த தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 189 நாடுகள் கூட்டாகசேர்ந்து வருடத்தில் ஒருநாளை பாதிக்கப்பட்ட மக்களுக்குமக்கள்நலன் நிறுவனங்கள மற்றும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனங்கள் நிவாரணம் மற்றும் பல்வேறு உதவிகளை செய்யும் வகையில் இத்தினத்தை அங்கீகரித்துள்ளன.

இத்தினத்தை, வன்முறைகள், சண்டைகள், இடம்பெயர்வுகள், அழிவுகள் போன்றவை இடம் பெறா வண்ணம் அனுஷ்டிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை கேட்டுள்ளது. (உ-7)

### ஈவிரக்கமற்ற மனிதருக்கு
## ஆயிரத்து 50 வருட சிறைத் தண்டனைவிதிப்பு

(லண்டன்)

போக்குவரத்து நெடுஞ்சாலை சட்டங்களை மீறியதுடன் பாரிய குற்றச் செயலைப் புரிந்த ஒருவருக்கு ''ஒபேமா'' நீதிமன்றம் ஆயிரத்து 50 வருட சிறைத் தண்டனை விதித்துள்ளது.

இளம் பெண் ஒருவரை தன்னுடைய காரின் பின் புறத்தில் கட்டி 700 அடி தூரம் வரை இழுத்துச் சென்ற 44 வயதான கீப்ஸ்'' லாஜ்வா ஜோர்ஜ்'' என்பவருக்கே ஒபேகா நீதிமன்றம் இத் தண்டனையை வழங்கியுள்ளது.

சீப்லாஜ்வா ஜோர்ஜ் கொடுமைப் படுத்திய ''பிமியன் வில்லியம்ஸ்'' என்ற பெண் கடும் காயமடைந்த போதிலும் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பியுள்ளார்.

இதுபோன்றபலகுற்றங்களை புரிந்த ஜோர்ஜிற்கு, ஒவ்வொரு பாரிய குற்றத்திற்கும் முறையே 750, 150,150 வருடங்கள் என மொத்தம் ஆயிரத்து50வருடங்கள்சிறைதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## அகதி அந்தஸ்து ஜேர்மனியில் நிறுத்தம்

(பேரின்)

இலங்கையில் இருந்து அரசியல் தஞ்சம் கோரி ஜேர்மனிக்கு வரும் அகதிகளுக்கு இனிமேல் அகதி அந்தஸ்து வழங்கப்பட மாட்டாதென்று ஜேர்மன் மத்திய உள்துறை அமைச்சர் ஷெலிப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஜேர்மனிய அரசு அகதி அந்தஸ்து கோருபவர்களுக்கான அனுமதியை நிறுத்தியுள்ளது. அவ் வாறானவர்களுக்கு தற்காலிகமான 'டும்டும்' எனப்படும் வதிவிட அனுமதியே வழங்கப்படும்.

இலங்கை சோமாலியா அல்ஜீரியா ஆகிய நாடுகளில் இருந்து ஜேர்மனுக்கு வரும் அகதிகள் தம நாடுகளில் தமக்கு உயிராபத்து இருப்பதாக கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏனெனில் அந்நாடுகளில் அத்தகைய காரணிகள் எதுவும் இல்லை யென்றும் ஷெலிப் மேலும் கூறினார். (இ)

## ராப்ரிதேவியின் நிலை ஜெயலலிதாவுக்கும் ஏற்படலாம்
### செய்தியாளர் சஞ்சை கோஷ்

(சென்னை)

செல்வி ஜெயலலிதா தூரத்திலிருந்து கண்காணிக்க அ. இ. அ.தி.மு.க அரசு தமிழகத்தில் நடைபெறலாமென்று செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

பீஹார் மாநிலத்தில் ராப்ரி தேவி எப்படி குற்றவாளியாகக் கருதப்பட்டு தூரத்திலிருந்து ஆட்சியை மேற்பார்வை செய்கிறாரோ அதேபோல் செல்வி ஜெயலலிதாவின் ஆட்சியும் இடம் பெறுமென்று செய்தியாளர் சஞ்சை கோஷ் தெரிவித்தார்.

இது ஒரு சிக்கலான பிரச்சினை என்பதை கடந்த சில நாட்களின் நீதிமன்ற விசாரணை அனுபவத்தினால் அ இ. அ. தி. மு. கவினர் ஒப்புக் கொள்கின்றார்.

மேல் நீதிமன்ற உத்தரவின் படி ஜெயலலிதாவின் தடை மனுவை விசாரிக்க இன்னும் ஒரு மாத கால அவகாசம் தேவைப்பட்டால் தேர்தலில் சாதகமான முடிவு வந்தாலும், தேர்தலில் நிற்பதற்கு கால அவகாசம் போதாது போகலாம். அந்த வேளையில் செல்வி ஜெயலலிதா தூரத்தே நின்று ஆட்சியைப் பார்க்கும் பார்வையாளராகத் தான் இருக்க முடியுமென்று தெரிவித்தார். [து]

## வியட்நாம் துறைமுகத்தில் கப்பல்கள் மோதல்

(ஹனோய்)

லைபீரியக் கப்பலும் வியட்நாம் கப்பலும் துறை முகத்துக்குள் மோதியுள்ளன.

எண்ணெய்யுடன் வியட்நாம் துறைமுகத்துள் லைபீரிய கப்பல் நுழைந்த பொழுது அங்கு நின்ற வியட்நாம் கப்பலுடன் மோதியது. அதனால்கப்பல் உடைந்ததில் துறைமுக கடற் பரப்பினில் பல்லாயிரம் தொன் டீசல் பரவியதாகவும் அப்பகுதி சூழலுக்கு இது பங்கம் ஏற்படுத்தும் எனவும் கருதப்படுகிறது. (து)

### உலக தரிசனம்

### செய்திப்பரல்

★ சீனாவின் தென்பகுதியில் அண்மையில் வீசிய சூறாவளியால் 6 இலட்சத்து 60ஆயிரம் குவாங்டொங் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

★ கியூபாவில் கரும்பு உற்பததி 2002 ஆம் ஆண்டில் 41 இலட்சம்தொன் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

★ ஸாம்பியாசட்டவிரோதமாக தனது நாட்டுக்குள் பிரவேசித்த 35 அங்கோலா இராணுவத்தினரை விடுதலை செய்துள்ளது.

★ நியூயோர்க்கிலுள்ள அமெரிக்க இயற்கை வரலாற்று பொருட்காட்சிச்சாலையில் இந்து மதத்தின் அனுஷ்டானங்கள், விழாக்கள் பற்றிய புதிய அம்சங்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. (உ-3)

## தீவிரவாதிகள் தாக்குதல் மதபோதகர் உட்படஐவர்பலி

(புதுடில்லி)

இந்தியாவின் கிழக்கு மாநிலமான ஜார்க் கண்டில் மதபோதகர் உட்பட ஐவர் தீவிர வாதிகளின் தாகுதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜார்கண்ட் தலை நகரான ரான்சிக்கு 50 கிலோ மீற்றர் தொலைவில் வீதியால் ரோந்து சென்று கொண்டிருந்த பொலிஸ் வாகனம் மீது மாவோ தீவிரவாதிகள் தாக்கியதிலேயே, மேற்படி ஐவரும் பலியானதுடன், மேலும் ஐந்து பேர் காயமடைந்தனர்.

மாவோ தீவிர வாதிகள் நால்வருக்கு அண்மையில் ஜார்க்கண்ட் மாநில அரசு தூக்குத் தண்டனை விதித்ததற்கு எதிர்ப்புக் காட்டும் முகமாகவே இந்த அதிரடித் தாக்குதலும் இடம் பெற்றிருக்கிறது. (து)

## போபால் நச்சு வாயு பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரணம் வழங்குக
### பிரான்ஸ் நாவலாசிரியர் கருத்து

புதுடில்லி)

போபால் நச்சு வாயு கசிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று பிரான்ஸ் நாவலாசிரியர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டு நாவலாசிரியரானடொனிக் லபியே இந்தியாவில் தனது நாவலின் வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்துகையில்; யூனியன் காபேற்நச்சுவாயுக்கசிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

வெளியிடப்பட்டுள்ள இந்த நாவலில் நச்சு வாயு கசிவினால் பல்லாயிரக் கணக்கானோர் பலியானமை, இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் நோய் வாய்ப்பட்டமை குறித்து சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நூலிற்கு போபாலின் இரவு 12.00 மணியென்று பெயர் வைத்துள்ளார்.

இதேவேளை, இந்த நாவலை ஒஸ்கார் விருது பெற்ற திரைப்பட இயக்குநர் ஒலிவற் ஸ்ரோன் திரைப்படமாக்க விருப்பம் தெரிவித்திருக்கிறாரென்று நாவலாசிரியர், நூல் வெளியீட்டுவிழாவின் போது தெரிவித்தார். (து)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அவுஸ்ரேலியா நிர்ப்பந்திக்கவேண்டும்
### அவுஸ்.பிரதமரிடம்தமிழர்குழுகோரிக்கை

(சிட்னி)

இலங்கையில் தொடரும் யுத்தத்தைநிறுத்தி சமாதானப்பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க இலங்கை அரசை அவுஸ்ரேலிய அரசு நிர்ப்பந்திக்க வேண்டுமென அவுஸ்ரேலியாவில் வதியும் தமிழர் குழுவொன்று அவுஸ்ரேலிய பிரதமர் ஜோண் ஹவார்ட்டை நேரில் சந்தித்துக் கேட்டுக் கொண்டது.

அவுஸ்ரேலிய மெல்போன் நகரில் லிபரல் கட்சியின் இளைஞர் அணி பல்கலாசார இராப்போசன விருந்தொன்றை நடத்தியது. இவ் விருந்து பசாரத்தில்பிரதமர் ஜோண் ஹவாட் கலந்து கொண்டார்.

இவ் விருந்து வைபவத்திலேயே மேற்படி தமிழர் குழு பிரதமரைசந்தித்துமகஜரொன்றையும் கையளித்தது

இலங்கையில் நீடித்துக் கொண்டிருக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவராது இலங்கையரசுஅதனைமேலும் தொடர இரசாயன ஆயுதங்களை கொள்வனவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன

இத்தகவல் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழ் மக்களை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளதாக அம் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் அக்டோபர் மாதம் அவுஸ்ரேலிய குயின்லாந்து மாநிலத்தில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மகாநாட்டில் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தை கவனத்தில் கொள்ளுமாறு பிரதமரை மேற்படி தமிழர்குழு வலியுறுத்தியுள்ளது,

நோர்வேயின் சமாதான முயற்சிகள் முறிவடைந்த நிலையில் மீண்டும்தொடரப்படாமல் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் புறக்கணிக்கப்பட்டமை கவலைக்குரிய விடயமெனவும் விரைவாக சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து யுத்தத்தை முடிவுக்குகொண்டுவந்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த இலங்கை அரசை அவுஸ்ரேலிய அரசாங்கம் வலியுறுத்த வேண்டுமெனவும் அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அல்பேனியர் ஆயுத கையளிப்பு சாத்தியம் அற்ற ஒன்று
### நேட்டோ தளபதி தெரிவிப்பு

(ஸ்கொப்ஜெ)

மசிடோனியாவில் வன்முறையை நடத்திவரும் அல்பேனிய தீவிரவாதிகளின் ஆயுதங்களை கைப்பற்றும் முயற்சி வெற்றியளிக்கும் சாத்தியம் இல்லை. அல்பேனியர் அனைத்து ஆயுதங்களையும் ஒப்படைப்பர் என நம்ப முடியாது என நேட்டோ படைத்தளபதி தெரிவித்துள்ளார்.

அல்பேனிய கிளர்ச்சியாளர்கள் தம்மிடமுள்ள ஆயுதங்களை நேட்டோ படையினரிடம் கையளித்த நிகழ்வில் பத்திரிகையாளர் மத்தியில் பேட்டியளித்த நேட்டோ படைத்தளபதி ஜெனரல் ஜோசப் ஹால்ஸ்டன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்; அல்பேனிய தீவிரவாதிகளுடன் ஒருநிரந்தர சமாதான உடன்படிக்கை செய்தாலன்றி தற்போது நிலவிவரும் வன்முறைக்கு தீர்வுகாண முடியாது. மீண்டும் அல்பேனியர் ஆயுதம் ஏந்த வேண்டி வரும் என அவர் தெரிவித்தார்.

அல் பேனியர்களிடமிருந்து இற்றை வரை 1,210 துப்பாக்கிகள் 627 கண்ணிவெடிகள், மற்றும் 118,212 தோட்டாக்கள் என்பன மீளப்பெறப்பட்டுள்ளன.

ஆனாலும் இவர்களிடம் இன்னும் ஆயுதங்கள் இருப்பதாகத்தெரியவருகிறது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார் (உ-07)

செவிகைப்பச் சொற்
பொறுக்கும் பண்புடை
வேந்தன் கவிகைக் கீழ்த்
தங்கும் உலகு.

குறள்

## வலம்புரி

### நியாயமான கோரிக்கை!

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுக்கும் அழைப்பில் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்துகொள்ளவேண்டுமென ஆறு அமைச்சர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களிடம் கோரியுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடுதலைப் புலிகளுடன் பேசுவதன் மூலமே ஏற்படமுடியுமென்ற உண்மை உணரப்பட்ட நிலையில், விடுதலைப்புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுக்கும் அழைப்பை அரசும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டாகஇணைந்துவிட வேண்டுமென்பது ஆறு அமைச்சர்களினதும் கோரிக்கையாகும்.

இக்கோரிக்கையானது, பலமிழந்துள்ள அரசுடன் பேசுவதில் பயனில்லை என்ற விடுதலைப் புலிகளின் நியாயமான சருத்திற்கு, நிவாரணம் தேடுவதாக அமைந்துள்ளது. அதாவது ஆளும் பொது ஜனஐக்கியமுன்னணியும், எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டாக புலிகளுக்குஅழைப்பு விடும் போது அதில் ஓர் கனதியை எதிர்பார்க்க முடியும்.

இதுவரை காலமும்விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குஅரசு முனைந்த சந்தர்ப்பங்களிலெல்லாம், எதிரணியின் எதிர்ப்பும் இருக்கவே செய்தது. ஆனால்இப்போது ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் புலிகளுடன் பேச வேண்டும் என்ற முடிவில் ஓர் இணக்க நிலை இருப்பதாகத் தெரிகிறது.

இந் நிலையில் ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டாக விடுதலைப்புலிகளுக்கு அழைப்பு விட்டால் அது இலங்கைத் தீவில் சமாதானம் அரும்புவதற்கு வழி வகுக்கும்.

எனினும் ரணில் எந்தளவு தூரம், அரசுடன் சேர்ந்து புலிகளைப் பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுவார் என்பது கேள்வியே.

ஏனெனில் ஆளும்பொது ஜன ஐக்கியமுன்னணியை வீழ்த்தி ஆட்சிப் பீடமேற வேண்டுமென்பதே ஐக்கிய தேசியக்கட்சியின் இலக்கு. இவ்விலக்கை அடைவதற்காக விடுதலைப்புலிகளுடன் பேசவேண்டுமென ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் கூறினாரா, அல்லது உண்மையிலேயே நிலைமையை உணர்ந்து கூறினாரா என்பதைக் காலமே தீர்மானிக்க வேண்டும்.

---

பரமபிதா காட்டிய பாதை

# ஒன்றை இழந்து இன்னொன்றைப்பெறல் போல்

# தியாகத்தின் மூலமே தேவனை அடைய முடியும்



இவ்வுலகத்தின் வாழ்வு எப்பொழுதும் ஒரே மாதிரியாக அமைந்ததில்லை காலங்கள் மாறும் போது அக்காலங்களின் தாக்கங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதேபோல மனிதர்களின் வாழ்விலும் இன்ப துன்பங்கள் மாறிமாறி வந்து கொண்டே இருக்கின்றன. நாம் வறுமையிலும், வளமையிலும்வாழப்பழகினால்எமது வாழ்வில் அமைதியும், மன மகிழ்வும் எப்பொழுதும் நிறைந்து காணப்படும். இல்லையேல் நாம் மகிழ்ச்சியில் மலர்ந்து துன்பத்தில் வாடிவிடும் மலர்களைப்போல துன்பத்திற்கு முகங்கொடுக்க முடியாதவர்களாக மாறிவிடுவோம். எதையும் இழக்காமல் இன்னொன்றைப் பெறுவது கடினமானதாகும் ஓர் இடம் மேடாக மாறவேண்டுமானால் இன்னுமொரு இடம் பள்ளமாக ஆகியே தீரவேண்டும் என்பது உலகின்நியதியாகும்.

### தியாகம் செய்தல்

அன்னையானவள் செய்கின்ற தியாகங்களாலே பிள்ளை வளர முடிகின்றது. கஷ்டப்பட்டுப் படிப்பதினாலேயே தேர்விலே வெற்றி பெற முடிகின்றது; முயற்சியோடு உழைப்பதினாலே வாழ்வில் முன்னேற்றம் காண முடிகின்றது. இவைகளைப் பெறுவதற்கு நாம் செய்வது தியாகமே இருந்த போதும் சுய நன்மையை விடப் பொது நன்மைக்காக செய்யும் தியாகங்களே உண்மையான தியாகம் என்ற கருத்தைப் பிரதிபலித்து நிற்கின்றது. இயேசு தம்மைப் பின்செல்ல விரும்புகின்றவர்கள் தமது சீடர்களாகப் பணியாற்ற விரும்புகின்றவர்கள் இவற்றையெல்லாம் தியாகம் பண்ணவேண்டும் என்று கூறுகின்றார். 'என்னிடம் வருபவர் தம் தாய், தந்தை. மனைவி, பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள் ஆகியோரையும் ஏன் தம் உயிரையுமே என்னை விட மேலாக கருதினால் அவர் என் சீடராய் இருக்க முடியாது' (லூக் 14.24,27) இது ஒவ்வொருகிறிஸ்தவனுக்கும் விடுக்கப்பட்ட சவாலாகும். இதனை ஏற்று வாழாதவர்கள். பெயரளவிலேதான் கிறிஸ்தவர்கள்.

### இலகுவான வேலை வாய்ப்பு ஆகாது

கடவுளின் திட்டத்தையும் ஆண்டவரின் திருவுளத்தையும் நாம் அறியாதவரை இவ்வுலகிற்கு உரிய ஊன் இயல்பின் இச்சை வாழ்வையே மேற்கொள்வோம். இயேசுவைப் பின் செல்ல ஆர்வம்மட்டும் போதாது இயேசுக்காகவும் நற்செய்திக்காகவும்எதையும் இழக்க நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். அசுத்தமான பாத்திரம் கழுவித்தூய்மைப் படுத்தப்படாது அதிலே அன்னத்தை உண்ண முடியாது. அவ்வாறு செய்வதினால் இரண்டும் கெட்ட நிலையாகிவிடும்.

இயேசுவுக்குப் பணி செய்வது இலகுவான வேலை வாய்ப்பாகவும் நாம் கருதி விடமுடியாது. அவ்வாறு கருதுபவர்கள் அதற்கேற்ற தண்டனையைப் பெற்றே ஆக வேண்டும். நாளாந்தம் இறைவனுடைய சத்தியில்லாமல் நாம் இறைவனுக்கு உகந்த வாழ்க்கை மேற்கொள்ள முடியாது. நாம் தகாதனவற்றைச் செய்து கொண்டு இறைவனுக்கு உகந்தவர், அவரின் சீடர்கள் என்று பெயரைப் பொறித்து விட முடியாது. உலகத்தின் பார்வைக்கு நாம் நல்ல நிர்வாகிகளாகவும் நல்லவர்களாகவும் நடித்துக் கொண்டு எம் செயல்கள் இறைவன் பார்வையில் மறைந்துள்ளது என்று எண்ணுவோமாக இருந்தால் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கின்றோம்.

### சிலுவையைச் சுமத்தல்

"தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின்னே வருபவர். எனக்குச் சீடராய் இருக்க முடியாது. இன்று பலருக்குச் சீடராக இருக்க ஆசை. ஆனால் சிலுவை சுமக்க மறுக்கின்றனர். மற்றவர் துன்பங்களில் பாராமுகமாகவும் நீதிவழங்குவதில் நியாயத்தர்களாகவும் தம்மை ஆக்கிக் கொள்கின்றனர்.

எனவே எம்மிடம் ஏழ்மை உள்ளம், மன்னிக்கும் மனப்பக்குவம், நேசிக்கின்ற தாராள குணம் எல்லாம் மெல்லமெல்ல எம்மை இயேசுவின் பாதச் சுவடுகளின் பின்னே அடியெடுத்துவைக்க ஊக்கமூட்டும். இறைவனின் வார்த்தையை எம் வாழ்வுக்கு வழி சொல்லும் அனுதின ஆன்மீக உணவாக்குவோம். ஆண்டவன் அருள் எம்மைத் தொடர்ந்து வரும். □

**அமலநிரேசன் அருள்தாசன்**

---

சோதிட பலன்

# விஷு புத்தாண்டில் இராசி மாறும் கிரகங்கள்

# தருகின்ற பலன்கள் நல்லவையா? தீயவையா?

(சென்ற வாரத்தொடர்ச்சி)

### மீனராசி (பூரட்டாதி-4, உத்தரட்டாதி, ரேவதி)

மீனராசியில் பிறந்தஅன்பர்களுக்குக் குருபகவான் 2001 ஜூன் 13ல் மூன்றாம் இடத்திலிருந்து 4ம் இடத்திற்கு மாற்றம் அடைகின்றார். சனீஸ்வரன் ($7\frac{1}{2}$ சனி கடைக்கூறில்) 2ம் இடத்திலிருந்து 3ம் இடத்துக்கு 2001, ஏப்பிரல் 11ல் மாறி பலன்கள் நடக்கவுள்ளன.

2001, ஜூன், 13ல் இருந்து குரு 4ல் சஞ்சரிப்பதால் நன்மையான விஷயங்கள் படிப்படியாகத் தோன்றும. தொழில், உத்தியோகலாபம், தொழில் முயற்சிகளால் வருமான முன்னேற்றம் வரவுள்ளன. கல்வி, தேர்வு, விஷயங்கள் நன்மை செய்யவுள்ளன. கல்வியில் அதிக பிரயாசம் இருக்கும், குழந்தை நன்மை அடையக் கூடும. புத்திரர்களுக்கு அலைச்சல், செலவினங்கள தோன்றும்: சிலர் ஆடம்பரமாக வாழத்துவங்குவார்கள், தாயாருக்கு மத்திம சுகம் விளங்கி வரும். தகப்பனுக்கு இடமாற்றம், கடன் பிரச்சினை, ரோகம், மனக் கவலைஉண்டாகும். தொழில் உத்தியோக வாய்ப்பு ஏற்படும். பதவி உயர்வு வரவுள்ளது. மனைவிக்கு அலைச்சல், இடமாற்றம், ஒய்வின்மை, சில போது மனக்கிலேசம்உண்டாகும், குடும்பத்தில் சிலர்சிக்கல் பிரச்சினையை எதிர்நோக்குவர், நோய் தீரும், கடன் தொல்லை விலகும் வாகனம், வீடு, பூமி ஆகியவை சேரும். மாமன்மார் லாப சுகம் பெறலாம். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் இலகுவில் நடக்கும். சிலர் செலவுடன் பயண வெற்றி அடைவர். பட்டக் கல்வி லாபம் தடங்கலாகி வரும். அதிர்ஷ்டம், நன்மை தடைப்படும். குடிபோதை, உல்லாசம் பழக்கமுள்ளோருக்கு நன்மை இருக்கும்; 2001, ஏப்பிரல், 11லிருந்து சனி 3ல் அமைவதால் நன்மை விருத்தி வரவுள்ளது: வெளிநாட்டுப் பயண லாபம், உத்தியோகம் கிடைத்தல், வாகன லாபம், புதிய தொழில், வருமான முயற்சிகள் உண்டாதல் போன்றவை தோன்றும், சகோதரங்களுக்கிடையில் முரண்பாடு நிலவும். கல்வி, தேர்வு நன்மை சிலபோது குறையும். உணவு நன்மை உள்ளது நித்திரைசுகம்தடையாகும். சிலபோது பிரயாண அலைச்சல், வீண் விரயம் தோன்றும். கள்ளச்சந்தை குறுக்கு வழி லாப முயற்சிகள் உண்டாகும. ஆயுள் விருத்தி, வழக்கு வெற்றி, சத்துரு லாபம் இருக்கும், நோய் கடன் நீங்கும்.

### இராகு, கேது பலன்

4ல் இராகுவினால் கல்வி லாபம், வாகன நஷ்டம், வீட்டுநன்மை, வாடகைவீட்டு லாபம் சிலருக்குக் கிடைக்கும். வயிறு, குடல், ரோகம் வரும். 10ல் கேதுவினால் தொழில் சமசுகம், தெய்வ நன்மை, தாயாருக்கு ரோகம், தகப்பனுக்கு அதிர்ஷ்டம் விளங்கும். 2002ல் 8ல் இராகு, 9ல் கேதுவினால் கீர்த்தி தொழில்லாபம் பிரயாணச் சிறப்பு, பிதாவுக்கு அலைச்சல், செலவினங்கள் தோன்றும்,

### மற்றக் கிரகங்கள் பலன் 2001 புரட்டாதி வரை

சந்தோஷம, பணவரவு, பொருள் சேரல், உணவு நன்மை, பூமிலாபம் அமையும குடும்பத்தில் ரோகம், சோம்பல், வீண் தகராறு, தொழில் சுகக்குறைவு, ஒய்வில்லாமை நண்பர் ஆதரவு ஆகியவை அமையும். பகைவரால் லாபம். காரிய சித்தி, தொழில் விருத்தி, ஊக்கம், பெரியோர் எதிர்ப்பு, பிள்ளைகளால் ஆதரவு, உறவினர், அந்நியர் வகை உதவி அமையும்,

### 2001, ஐப்பசி, முதல் 2002 சித்திரை வரை

அதிகபிரயாசம், குடும்பத்தில்முரண்பாடுகள், பொருள் நஷ்டம், தேகசுகக்குறைவு, மதிப்பு ஆகியவை அமையும்; கடன்பிரச்சினை, அவமதிப்பு, நடைகஷ்டம், நித்திரை சுகம் தோன்றும், காரியலாபம். உறவினர் உதவி, ஆதரவு; குடும்ப மகிழ்ச்சி, தேகசுக லாபம். மகிழ்ச்சி, போசன சுகம், இடம்மாறுதல், மத்திம சுகம், அதிக பிரயாசம் பணப்பற்றாக் குறை, உதவிகுறைதல் பின்னர் நன்மை, சந்தோஷம் உண்டாகும்.

### உத்தியோகத்தர்களுக்கு

சிலமாதங்கள் நன்மை குறைவு யூனிலிருந்துதொழில் வருமான முன்னேற்றம் கிடைக்கும்.

2ஆம் பக்கம் பார்க்க]

சோதிடஞானி

**சண். மாஸ்டர்**

(ஆ. சண்முகலிங்கம்)

---



## தினசரி தியானம்

## ஆவாஹனம்

தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெருமானே,
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே?

**மாணிக்கவாசகர்**

நீக்கமற எங்கும் நிறைபொருளே, என் மனத்தினுள் உன் சாந்நித்தியத்தை என்றும் நிலைநாட்டுவாயாக. எல்லார் உள்ளங்களிலும் இறைவன் குடிகொண்டிருக்கிறார், ஆதலால் எல்லாரிடத்திலும் பேரியல்பு உண்டு, அப்பேரியல்பை முன்னணிக்குக் கொண்டு வரும்படியான நல்லிணக்கமே தெய்வ சாந்நித்தியத்தை வரவழைக்கும் ஆவாஹனமாகிறது:

**ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்**

# மக்கள் துயர்துடைப்புப்பணியில் கூட்டுறவின் பணி அளப்பரியது

## சு.ப. தமிழ்ச்செல்வன் புகழாரம்

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற தமிழ்ப்பகுதிகளில் அரசாங்கம் விதித்துவரும் பொருளாதாரத் தடையினால் கூட்டுறவு இயக்கம் சிறந்தமுறையில் இயங்கமுடியாத சூழ்நிலையில் இருந்தும் சோர்வடையாது மக்கள் நலனுக்காக பாடுபடும் தன்னலமற்ற கூட்டுறவாளர்களினதும், பணியாளர்களினதும் சேவைகளைப்பாராட்டாமல் இருக்கமுடியாது.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில்இடம்பெற்ற 79 வது சர்வதேச கூட்டுறவாளர்தின விழாவின் போது தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்து பேசிய தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் சொலமன் சிறில் தலைமையில் இவ்விழாநடைபெற்றது.

கூட்டுறவாளர்களும் பணியாளர்களும் கூட்டம் நடைபெற்ற கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு ஊர்வலமாகஅழைத்துவரப்பட்டனர்

இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சு.ப. தமிழ்ச்செல்வன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

பொருளாதாரச் சுமைகளைத் தமிழ் மக்கள் தாங்கி நின்ற வேளையிலும், துணிவுடன், மக்கள் துயர் துடைக்கும் பணியில் கூட்டுறவு இயக்கம் ஈடுபட்டிருப்பது பெருமைக்குரியதாகும்.

போர்க்காலச் சூழலில் இடம் பெயர்ந்த மக்களுக்கு மனித நேயத்துடன் மக்கள் தேவைகளை உணர்ந்து அதனைப் பூர்த்தி செய்யும் பணி பாராட்டுக்குரியதென்றும், கூறினார்.

இவ்விழாவில் தமிழீழ நிர்வாக சபைப் பொறுப்பாளர் பூவண்ணன் மங்கள விளக்கை ஏற்றிவைத்தார். கூட்டுறவுக் கொடியை பொற்துரை ஏற்றிவைத்தார். (ம)

### ஜே.வி.பி...

இதன்போதுபீடாதிபதிகள் ஜே.வி.பிக்குத்த மதுபாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

### பயண

முன் பயண அனுமதிபெற வேண்டியிருப்பதால் மக்கள் பல்வேறுசிக்கல்களை, எதிர்நோக்கியிருப்பதையும், ஒரு சிலஇடைத்தரகர் கள்பயன் பெறுவதையும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்தே பயண முன் அனுமதி பெறும் நடைமுறையை ரத்துச்செய்ய ஜனாதிபதி சம்மதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

### ஸ்ரீராகவேந்திரர் ஆலயத்தில்இன்று

நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீராகவேந்திரர் பிருந்தாவனத்தில் இன்று கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு காலை 9.00 மணி தொடக்கம் கிருஷ்ணபகவானுக்கு எண்ணைக் காப்பு சாத்தும் வைபவம் நடைபெற்று விசேட அபிஷேகமும் இடம்பெறும். தொடர்ந்து இன்னிசைக்கச்சேரிகளும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. [இ]

### 4 இலங்கை...

யானந்தன் லவக்குமார், தங்கவேலு குணசேகரம் ஆகியோரே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்களில் லஷ்மணன் பகீந்திரன் தொடர்ச்சியாக 14 நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றபோதும் எவரேனும் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோருவோரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறித்து ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தோம். (ம)

### அரசு-ஐ. தே. க

பினர்களின் ஆதரவை நாடியுள்ளது. விடுதலைப் புலிகளுடன் அரசு பேசுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்குவது அவசியம். அத்தகைய ஆதரவை வழங்க தமிழ்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கியதேசிய கட்சியை வலியுறுத்த வேண்டும்.

இத்தகைய ஆதரவைப் பெற்றுத்தருமாறு தமிழர் விடுதலைக் கூட்

### அரசு...

கையில்லாப் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சிப் பேச்சாளர் கருணாசேனகொடித்துவக்கு வலம்புரிக்குத் தெரிவித்துள்ளார்நான்குஆணைக்குழு அமைப்பது தொடர்பானசட்டமூலம் 24ந் திகதிகளில் பாராளுமன்ற விவாதத்திற்குஎடுத்துக் கொள்ளப்படவிருப்பதால்26ம் திகதி நம்பிக்கைஇல்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் அவர்தெரிவித்தார்

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தற்போது 60க்கும் மேற்பட்ட உறுப்பினர்களின் கையொப்பம் பெறப்பட்டு விட்டதாகவும், ஜே.வி.பியின் 10 உறுப்பினர்களின் ஆதரவு இல்லாமல் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெல்லமுடியுமென்றும் கருனாசேனகொடித்துக்குமேலும் தெரிவித்தார். [வ]

### எழுதுமட்

ஞுவ வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### வன்னிக்குச்...

குறித்து பேசியதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருவருக்கும் இடையில் நடந்த பேச்சின் போது யாழ் ஆயர் தமிழ்மக்களின்நிலைமை இன்றையஅரசியல் நிலைவரம் மற்றும் கத்தோலிக்க ஆயர்களின் அரசியல் நிலைப்பாடு குறித்துமிகத் தெரிவாக தமிழ்ச்செல்வனுக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

ஆன்மீகப் பயணமாக வன்னி சென்ற ஆயர் வன்னி மறைக்கோட்டத்தில்அக்கராயன்,முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, வட்டக்கச்சி ஆகிய பகுதிகளில் கத்தோலிக்க இடையோர்களுக்கு திருச்சடங்கு நடத்தும் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர்.

வன்னி விஜயத்தின் மூலம் அம் மக்களின் அவலங்களை நேரில் கண்ட ஆயர், அவை பற்றி சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு தெரியப்படுத்துவார் என்றும் வன்னிமக்களின்அவலநிலை குறித்த விரிவான அறிக்கையொன்றை யாழ் திரும்பியதும்ஆயர்வெளியிடுவார்என வும்எதிர்பார்க்கப்படுகிறது.[இ]


30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும் விஷேசமாக தயாரிக்கப்பட்டது.

சுத்தமான

**வி.எஸ்.பி. நல்லெண்ணெய்**

தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(கி/1986)



**YOGI HOME SCIENCE ACADEMY**

புதிய வகுப்புக்கள் 21-09-2001 அன்று முதல் ஆரம்பமாக உள்ளது.

1. இலகுவழித் தையல் [Cutting Classes]
2. கேக் ஐசிங் [Birth day and occasional – Cakes]
3. சமயற்கலை [General Cokkery]
4. பூக்கள் தயாரித்தலும் அலங்கரித்தலும்
5. Fabric Painting



## கண்ணீர் அஞ்சலி

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த

**பொன்னுத்துரை சிங்கராஜா**

கொழும்பில் நேற்றிரவு (08-09-2001, அமரத்துவம் அடைந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருறும், குடும்பத்தவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

சி. புவனேந்திரன்

கோண்டாவில் மேற்கு, (C-2474)



இதோ வெளிவந்துவிட்டது!

ஆசிரியர் வே. நவமோகனின்

**கம்பியூட்டர் வேர்ல்ட்**

COMPUTER WORLD

சகல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

விலை ரூ. 20-00

(C/2473)



**வி.எஸ்.பி. குறூப்பின்**

**பிறிமா கோதுமை மாவு**

4. பூக்கள் தயாரித்தலும் அலங்கரித்தலும்
5. Fabric Painting

### விசேட பயிற்சி நெறிகள்

1. மேலைத்தேய ஐசிங் அலங்காரங்களும் மாச் சீனி மலர் அலங்காரங்களும் [Fondant Icing–struc–turcs and Sugar Flowers]
2. அடிப்படை ஒப்பனையும் தலை அலங்காரங்களும். இதில் பாடக் குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்களும் அளிக்கப்படும் (15 வகுப்புகள் மட்டும்)

### ஒப்பனை செய்முறைகள்

1. இந்து, கிறிஸ்தவ மணமகள் அலங்காரம்
2. சாதாரண ஒப்பனை
3. எண்ணெய் பசையுடன் கூடிய ஒப்பனை
4. எண்ணெய் உள்ள சருமத்துக்கான ஒப்பனை
5. நவீன தலை அலங்காரங்கள்
6. இந்திய, சிங்கள, குஜராட்டி மற்றும் மடிசார் போன்ற வித்தியாசமான சாறி கட்டும் முறைகள்

★ விரைவில் வட்டுக்கோட்டையிலும் வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளது.

**75. அம்மன் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
(வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

(3533)

பெற்றுத்தருமாறு தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசின் இக் கோரிக்கை தொடர்பாக வெகு விரைவில் தமிழ் எம்பிக்கள் ஒன்றுகூடி 'ஐக்கியதேசியக்கட்சிக்கு நெருக்குதல் கொடுப்பது தொடர்பாக தீர்மானிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசுடனான பேச்சு வார்த்தையில் விடுதலைப் புலிகள் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர் என அறிந்தே இவ்விடயத்தில் அரசுக்கு உதவ முடியுமென்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

[வ–இ]

### விண்ணப்ப...

பரீட்சைக்கான விண்ணப்பம் இம்மாதம் 21ம்திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகபொது நிர்வாக உள்நாட்டலுவலர்கள் அமைச்சுஅறிவித்துள்ளது.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்கும்இறுதித் தினம் கடந் 5ம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. (வ)

# பிறிமா கோதுமை மாவு விற்பனை நிலையம்

பிறிமா (சிலோன்) லிமிட்டெட்டின் உற்பத்திப் பொருட்களின் யாழ் குடாநாட்டு விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளதை எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

பிறிமா ஸ்தாபனத்தின் கோதுமைமாவு விற்பனைநிலையத்தை எமது 279, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் எதிர்வரும் புதன்கிழமை (12-9-2001) பகல் 11 மணி முதல் 12 மணி வரை உள்ள சுப நேரத்தில் ஆரம்பிக்கப்பட இருப்பதினால் வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

**279, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

பங்காளர்கள்
**வி. எஸ். பி. குறூப்**

தொலைபேசி: 2653
தொலைநகல்: 2140

(C/2470)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 09-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.